ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ கேசவன் தமர் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கேசவன் தமர் ॥

பன்னிருநாமப் பாட்டு

‡கேசவன் தமர்⋆ கீழ் மேல் எமர் ஏழ் எழு பிறப்பும்⋆
மா சதிர் இது பெற்று⋆ நம்முடை வாழ்வு வாய்க்கின்றவா⋆
ஈசன் என் கருமாணிக்கம்⋆ என் செங்கோலக் கண்ணன் விண்ணோர்
நாயகன்⋆ எம் பிரான் எம்மான்⋆ நாராயணனாலே (1)

நாரணன் முழுவேழ் உலகுக்கும் நாதன்⋆ வேத மயன்⋆
காரணம் கிரிசை கருமம் இவை⋆ முதல்வன் எந்தை⋆
சீர் அணங்கமரர் பிறர் பலரும்⋆ தொழுதேத்த நின்று⋆
வாரணத்தை மருப்பொசித்த பிரான்⋆ என் மாதவனே (2)

மாதவன் என்றதே கொண்டு⋆ என்னை இனி இப்பால் பட்டது⋆
யாதவங்களும் சேர் கொடேன் என்று⋆ என்னுள் புகுந்திருந்து⋆
தீதவம் கெடுக்கும் அமுதம்⋆ செந் தாமரைக் கண் குன்றம்⋆
கோதவமில் என் கன்னற் கட்டி⋆ எம்மான் என் கோவிந்தனே (3)

கோவிந்தன் குடக் கூத்தன்⋆ கோவலன் என்றென்றே குனித்து⋆
தேவும் தன்னையும்⋆ பாடி ஆடத் திருத்தி⋆ என்னைக் கொண்டென்
பாவம் தன்னையும் பாறக் கைத்து⋆ எமர் ஏழ் எழு பிறப்பும்⋆
மேவும் தன்மையம் ஆக்கினான்⋆ வல்லன் எம் பிரான் விட்டுவே (4)

விட்டிலங்கு செஞ்சோதித்⋆ தாமரை பாதம் கைகள் கண்கள்⋆
விட்டிலங்கு கருஞ்சுடர்⋆ மலையே திரு உடம்பு⋆
விட்டிலங்கு மதியம் சீர்⋆ சங்கு சக்கரம் பரிதி⋆
விட்டிலங்கு முடி அம்மான்⋆ மதுசூதனன் தனக்கே (5)

மதுசூதனை அன்றி மற்றிலேன் என்று⋆ எத்தாலும் கருமம் இன்றி⋆
துதி சூழ்ந்த பாடல்கள்⋆ பாடி ஆட நின்றூழி ஊழிதொறும்⋆
எதிர் சூழல் புக்கெனைத்தோர் பிறப்பும்⋆ எனக்கே அருள்கள் செய்ய⋆
விதி சூழ்ந்ததால் எனக்கேல் அம்மான்⋆ திரிவிக்கிரமனையே (6)

www.prapatti.com

திரிவிக்கிரமன் செந் தாமரைக் கண் எம்மான்⋆
    என் செங்கனி வாய்⋆
உருவில் பொலிந்த வெள்ளைப் பளிங்கு⋆
    நிறத்தனன் என்றென்று⋆ உள்ளிப்
பரவிப் பணிந்து⋆ பல்லூழி
    ஊழி நின் பாத பங்கயமே⋆
மருவித் தொழும் மனமே தந்தாய்⋆
    வல்லை காண் என் வாமனனே (7)

வாமனன் என் மரதக வண்ணன்⋆ தாமரைக் கண்ணினன்
    காமனைப் பயந்தாய்⋆ என்றென்றுன் கழல்⋆ பாடியே பணிந்து⋆
தூ மனத்தனனாய்ப்⋆ பிறவித் துழதி நீங்க⋆ என்னைத்
    தீ மனம் கெடுத்தாய்⋆ உனக்கென் செய்கேன் என் சிரீதரனே (8)

சிரீ இதரன் செய்ய தாமரைக் கண்ணன்⋆ என்றென்றிராப் பகல் வாய்
    வெரீ இ⋆ அலமந்து கண்கள் நீர் மல்கி⋆ வெவ்வுயிர்த்துயிர்த்து⋆
மரீ இய தீவினை மாள இன்பம் வளர⋆ வைகல் வைகல்
    இரீ இ⋆ உன்னை என்னுள் வைத்தனை⋆ என் இருடீ கேசனே (9)

இருடீ கேசன் எம் பிரான்⋆ இலங்கை அரக்கர் குலம்⋆
    முருடு தீர்த்த பிரான் எம்மான்⋆ அமரர் பெம்மான் என்றென்று⋆
தெருடி ஆகில் நெஞ்சே வணங்கு⋆ திண்ணம் அறி அறிந்து⋆
    மருடி ஏலும் விடேல் கண்டாய்⋆ நம்பி பற்பநாபனையே (10)

பற்பநாபன் உயர்வற உயரும்⋆ பெரும் திறலோன்⋆
    எற்பரன் என்னை ஆக்கிக் கொண்டு⋆ எனக்கே தன்னைத் தந்த
கற்பகம்⋆ என் அமுதம் கார் முகில் போலும்⋆ வேங்கட நல்
    வெற்பன்⋆ விசும்போர் பிரான்⋆ எந்தை தாமோதரனே (11)

தாமோதரனைத் தனி முதல்வனை⋆ ஞாலம் உண்டவனை⋆
    ஆமோ தரம் அறிய⋆ ஒருவர்க்கென்றே தொழும் அவர்கள்⋆
தாமோதரன் உருவாகிய⋆ சிவற்கும் திசைமுகற்கும்⋆
    ஆமோ தரம் அறிய எம்மானை⋆ என் ஆழி வண்ணனையே (12)

www.prapatti.com

‡வண்ண மா மணிச் சோதியை⋆
    அமரர் தலைமகனை⋆
கண்ணனை நெடுமாலைத்⋆
    தென் குருகூர்ச் சடகோபன்⋆
பண்ணிய தமிழ் மாலை⋆
    ஆயிரத்துள் இவை பன்னிரண்டும்⋆
பண்ணிற் பன்னிரு நாமப் பாட்டு⋆
    அண்ணல் தாள் அணைவிக்குமே (13)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com